**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**O.S.No.418/2018**

Date: 13.07.2023

DW1 – குறுக்கு விசாரணை

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

வாதி என் மனைவி. பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் 17.11.1996 அன்று திருமணம் நடைபெற்றது. நாங்கள் இருவரும் 2014 ஆம் ஆண்டு வரை சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் 2014 ஆம் ஆண்டு 5 வது மாதம் வரை சேர்ந்து வாழ்ந்தோம். எனது மகன் கௌதம் என்பவர் 05.04.1998 அன்று பிறந்தார் என்றால் சரிதான்.

எனது மகன் கௌதம் தற்போது வாதியுடன் இருக்கிறார் என்றால் சரிதான். நானும் என் மனைவியும் பிரிந்தது முதலே கௌதம் என் மனைவியுடன் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் 2016 ஆம் ஆண்டு வரை என்னுடன் வசித்தார். அதன்பின்னிட்டு வாதியுடன் சென்றுவிட்டார். என் மகள் மோகனதேவி 30.11.1999 அன்று பிறந்தார். அவர் தற்போது என்னுடன் தான் இருக்கிறார். நானும் எனது மனைவியும் பிரிந்ததிற்கு பிறகு எவ்வளவு காலம் என் மகள் வாதியுடன் இருந்தார் என்றால் ஒருநாள்கூட வாதியுடன் அவர் தங்கவில்லை. வாதியை சென்று பார்த்துவிட்டு வந்துவிடுவார். அதுவும் ஒருவருடம் தான் சென்றார். அதன்பின்னிட்டு போகவில்லை.

என் மகளுக்கு தற்போது 24 வயது நடக்கிறது. நான் சேலம் செவ்வாய்பேட்டையில் உள்ள வாசவி மேல்நிலைப்பள்ளி என்ற தனியார் பள்ளியில் எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். 2011 ஆம் வருடம் 9 வது மாதத்திலிருந்த அந்த வேலை செய்கிறேன். நான் ஆரம்பத்தில் அந்த பணியில் சேர்ந்த போது எனது மாத ஊதியம் ரூ.5000/–. 2017 ஆண்டுவாக்கில் எனது ஊதியம் ரூ.7000/–. தற்போது எனது மாத ஊதியம் ரூ.12000/–. 2019 ஆம் ஆண்டில் எனது மாத ஊதியம் ரூ.7000/–

நான் எப்போதும் வருமானவரி கணக்கு தாக்கல் செய்ததில்லை. வாதியிடமிருந்து விவாகரத்து கோரி நான் தாக்கல் செய்துள்ள மனுவானது தற்போது சேலம் குடும்பநல நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். திருமணத்தின் போது எனது மனைவிக்கு அவரது பெற்றோர் 12 சவரன் நகை போட்டார்கள் என்றாலும், எனது முதல்விசாரணையில் 7 சவரன் நகை மட்டுமே என் மனைவி அணிந்துவந்ததாக நான் சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றாலும் சரியல்ல.

சிறிதுசிறிதாக 38 சவரன் நகை நான் சேர்த்து வைத்திருந்தாக எனது முதன்மை சாட்சியத்தில் சொல்லியிருப்பதற்கு ஆதரவாக நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்தெந்த ஆண்டுகளில் எவ்வளவு சவரன் நகைகளை எந்த கடையில் வாங்கினேன் என்று எனது முதன்மை சாட்சியத்திலும், எதிர்வழக்குரையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் LIC முகவராக 5, 6 வருடங்களாக இருந்தேன். 2008 முதல் 2012 வரை LIC முகவராக பணிபுரிந்தேன்.

நான் LIC முகவராக பணிபுரிந்தின் மூலம் எவ்வளவு வருமானம் ஈட்டினேன் என்று எனது முதன்மை சாட்சியத்திலும், எதிர்வழக்குரையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 2008 முதல் 2010 வரை ஒவ்வொரு வருடமும் நான் எவ்வளவு பணம் சம்பாதித்தேன் என்று எனது முதன்மை சாட்சியத்திலும், எதிர்வழக்குரையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சிறுகசிறுக பணம் ஈட்டி வீட்டில் வைத்திருந்ததால் என்னால் அந்த தொகை விவரங்களை குறிப்பாக சொல்லமுடியவில்லை.

LIC முகவராக தொழில் செய்யும் நபர்களுக்கு கொடுக்கப்படும் கமிஷன் ஆனது வருடத்திற்கு ஒருமுறை வங்கி கணக்கில் தான் வரவு வைக்கப்படும் என்றாலும், எனவே சிறுகசிறுக எனக்கு பணம் கிடைத்ததாகவும் அதன் கணக்கு விவரம் தெரியவில்லை என்று நான் சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றாலும் சரியல்ல. நான் வெளிநாடுகளுக்கு மரம் ஏற்றுமதி செய்யவில்லை. டிம்பர் வியாபாரத்தில் நான் ஏற்றுமதி முகவராக தொழில் புரிந்து வந்தேன் என்று காட்டக்கூடிய வகையில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வாதி 2007 முதல் 2012 வரை கொண்டலாம்பட்டி பகுதியில் மகளிர்சுயஉதவி குழுக்களை நடத்துகின்ற ஒருங்கிணைப்பாளராக இருந்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தினை பொறுத்த கிரைய உடன்படிக்கையானது முதலில் வாதி பெயரில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். காலி நிலத்திற்குண்டான கிரையத்தொகை ரூ.7,00,000/- என்றால் சரிதான். 17.03.2010 தேதிய கிரையபத்திரமானது வாதி பெயரிலும், என் பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். அதனை நான் என் சம்பாதித்தை கொண்டு வாங்கினேன் என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

கிரையபத்திரத்தில் கிரைய தொகையானது ரூ.4,80,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரையபத்திரத்தை எழுதி பதிவு செய்வதற்கு எவ்வளவு செலவு ஆனது மற்றும் எவ்வளவு தொகைக்கு முத்திரைத்தாள் வாங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தற்போது நினைவில்லை. வாதி அவரது சுயசம்பாத்திய பணத்தை கொண்டு மேற்படி கிரையத்தை என் பெயரிலும் வாதி பெயரிலும் கூட்டாக வாங்கினார் என்றாலும், அதனால் தான் என்னால் மேற்கண்ட சங்கதி தொடர்பான விவரங்களை சொல்லமுடியவில்லை என்றாலும் சரியல்ல.

மேற்படி கிரையசொத்தில் தார்சு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. தார்சு கட்டிடம் கட்டுவதற்கான முழு செலவுகளையும் வாதி வெளியில் கடன் வாங்கி செய்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கும் அதில் கட்டிடம் கட்டுவதற்கும் எனது உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் ரூ.20,00,000/பெற்றேன் என்று நான் சொல்வதை நிறுபணம் செய்யக்கூடிய வகையில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். யார் யாரிடமிருந்து எவ்வளவு தொகை பெற்றேன் என்று எனது முதன்மை சாட்சியத்திலும், எதிர்வழக்குரையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னிடம் தனிப்பட்ட முறையில் பணம் எதுவும் கிடையாது என்றாலும், நான் எனது வருமானத்தை கொண்டும், நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து பெற்ற பணத்தை கொண்டும் தாவா நிலத்தை கிரையம் வாங்கி அதில் கட்டிடம் கட்டியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. 2012 ஆம் ஆண்டு நான் கட்டிடத்தை கட்டினேன், ஒருவருடத்தில் கட்டி முடித்துவிட்டேன். நான்

தவறாக சொல்லுகிறேன் என்றாலும், என் மனைவியின் பணத்தை கொண்டு தான் கட்டிடம் கட்டப்பட்டது என்றாலும் சரியல்ல.

தாவா சொத்து குறித்த பட்டா, வீட்டுவரி ரசீதுகள், குடிநீர்கட்டண ரசீது ஆகியவை என் பெயரிலும், வாதி பெயரிலும் இருக்கிறது என்றால் சரிதான். வீட்டிற்குண்டான மின்சார இணைப்பு வாதி பெயரில் மட்டும் தான் இருக்கிறது என்றால் சரிதான். கேஸ் இணைப்பு வாதி பெயரில் இருக்கிறது என்றால் சரியல்ல. வாதியும், நானும் சேர்ந்து தான் வீட்டிற்குண்டான் கிரகபிரேவேசத்தை 28.10.2012 அன்று செய்தோம்.

என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் இருப்பது நான் இல்லை. நான் இரண்டாவது திருமணம் செய்து கொண்டேன் என்றாலும், முதல் திருமணம் ஆனது நிலுவையில் இருக்கும் போதே இரண்டாவது திருமணம் செய்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த புகைப்படங்களில் எனது மகள், எனது தாயார், எனது தம்பி மற்றும் அவரது மனைவி ஆகியோர் இருக்கிறோம் என்றால் சரியல்ல. சேலம் கஸ்தூரி வீடுகட்டும் கூட்டுறவு சங்கத்தில் தாவா வீட்டை அடமானம் வைத்து கடன் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். 09.03.2011 அன்று நானும் எனது மனைவியும் சேர்ந்து தான் அந்த கடனை வாங்கினோம்.

அந்த கடன் சம்மந்தமாக இந்த தாவா தாக்கல் செய்யப்பட்ட தினத்தன்று பாக்கி தொகையாக ரூ.4,82,621/– இருந்தது என்றால் சரிதான். நான் அந்த கடன் சம்மந்தப்பட்ட மாதத்தவணைத்தொகைகளை செலுத்தியதாக சொல்லுதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது சம்மந்தமாக எனது முதன்மை சாட்சியத்திலும், எதிர்வழக்குரையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் தான் கள்ளத்தனமாக இரண்டாவது திருமணம் செய்துகொண்டு அதனை மறைப்பதற்காக வாதியின் மீது அபாண்டமான சொல்ல தகதாக குற்றச்சாட்டுக்களை எனது முதன்மை சாட்சியத்திலும், எதிர்வழக்குரையிலும் நான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவியின் மீது நான் சொல்லியுள்ள அபாண்டமான குற்றச்சாட்டினை நிறுபிக்கும் விதமாக ஆவண சாட்சியம் எதுவும் இல்லை என்றால் சரிதான். என் மீது மானநஷ்டவழக்கு தாக்கல் செய்வதற்குரிய உரிமையை வாதி

தக்கவைத்துக்கொண்டிருக்கிறார் என்றால் சரியல்ல. வாதி தற்போதும் என் மனைவி என்ற அஸ்தஸ்துடன் கௌரவமாக வாழ்ந்து வருகிறார் என்றாலும் நான் தான் முறையற்ற இரண்டாவது திருமணம் செய்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது முதன்மை சாட்சியத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானது என்றாலும், அதில் உண்மை எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல.

வாதி கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றாலும், எனது எதிர்வாதமானது பொய்யானது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.